Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04)
6 Pages பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 20 November 2024 Click - 08 ₹. 1

அன்பார்ந்த மூத்த உறுப்பினர்களே!
நமக்கு நாமே குடும்ப நலப் பாதுகாப்பு திட்டத்தில், டிசம்பர் மாதம் 31ஆம் தேதி 2024 வரை மட்டுமே, வயது வரம்பின்றி சீனியர் போட்டோகிராபர்களும், வீடியோகிராபர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஜனவரி மாதம் ஒன்றாம் தேதி 2025க்கு பிறகு 60 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே நமக்கு நாமே திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள் என்பதை தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இப்படிக்கு : **துரைபாபு**, செயலாளர்

# நமது சங்க உறுப்பினர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வரும் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம்!

மத்திய சென்னை பகுதி




## ★டிசம்பர் 31ம் தேதி வரை மட்டுமே வயது வரம்பின்றி சீனியர் ஒளிப்படக் கலைஞர்கள் நமக்கு நாமே திட்டத்திற்கு விண்ணப்பிக்கலாம்!

இந்தியாவிலேயே அதிக அளவில் உறுப்பினர்களைக் கொண்ட மிகப் பெரிய சங்கமாக நமது சங்கம் இருந்து வருகிறது. நமது சங்கத்தில் புதிய உறுப்பினர்கள் ஒருபுறம் சேர்ந்து கொண்டே இருந்தாலும், சங்க உறுப்பினர்களிடம் உள்ள ஒரு வித அலட்சியம் காரணமாக விட்டு விட்டு(கண்டினியூட்டி இல்லாமல்) ரினிவல் செய்யும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் ஒரு புறம் உயர்ந்து கொண்டே போகிறது. இதனால், ரினிவலை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்படும் சில உதவிகள் உறுப்பினர்களுக்கு பெரிய அளவில் கை கொடுப்பதில்லை என்கிற வருத்தம் அனைவருக்கும் உண்டு. இதனால் சங்க உறுப்பினர்களிடையே ஒருவித அதிருப்தி நிலவுகிறது. உறுப்பினர்களுக்காக நமது சங்கம் பல வருடங்களாக செலுத்தி வந்த விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் திட்டத்தின் கிளைம் கூட சொல்லிக் கொள்ளும்படி இல்லை. இதன் காரணமாக பொதுக்குழு முடிவின்படி விபத்து காப்பீடு இன்சூரன்ஸ் நிறுத்தப்பட்டு அதை மாற்றி அமைக்கும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

இருப்பினும், நமது சங்க உறுப்பினர்களுக்கு அவ்வப்போது ஏற்படும் சில துயர சம்பவங்களின் போதுதான், ஒரு உறுப்பினரின் குடும்பத்தில் உள்ள பொருளாதார நிலையை நம்மால் உணர முடிகிறது. இந்த சூழ்நிலையை நேரில் பார்த்த பிறகு தான் அனைவரும் கவலைப்படுகின்றனர். வேதனை அடைகின்றனர். எனவேதான் அவர்கள் குடும்பத்திற்கு மனிதாபிமான அடிப்படையில் அனைவரும் உதவி செய்ய முன் வருகின்றனர். நமது சங்க நெட் ஒர்க்கை பயன்படுத்தி வாட்ஸ் அப் மூலமாகவும், நண்பர்கள் மூலமாகவும், தங்களால் முடிந்த அளவு நிதியை திரட்டி பொருளாதார ரீதியாக பின்தங்கிய அந்த குடும்பத்திற்கு கொடுத்து உதவி செய்து வருகின்றனர். இந்த தொகை அவர்களுக்கு நிச்சயம் போதுமானதாக இருக்காதுதான். இது கொஞ்சம் தர்ம சங்கடமான நிலைநான் என்றாலும், இதை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே நமது சங்க செயலாளர் திரு.துரைபாபு அவர்களின் சீரிய நோக்கம் ஆகும். இதன் அடிப்படையில் உருவாகி இருப்பதுதான் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம். உதவும் நோக்கம் கொண்டவர்களை ஒருங்கிணைத்து மனிதாபிமான அடிப்படையில், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்வதே நமக்கு நாமே திட்டத்தின் நோக்கம் ஆகும். ஆயிரம் உறுப்பினர்கள் இத்திட்டத்தில் இணையும் பட்சத்தில், ஒவ்வொரு குடும்ப வாரிசுதாரர்களுக்கும் இரண்டு லட்சம் ரூபாய் வரை, எவ்வித இன்சூரன்ஸ் இன்றி இத்திட்டத்தின் மூலம் உடனடியாக பெற்றுக் கொள்ள முடியும்.

நமது சங்க உறுப்பினர்களிடம் நல்ல வரவேற்பை பெற்றுள்ள நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற நமது குடும்ப விழாவில் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத சில காரணங்களால் இந்த தொடக்க விழா தள்ளிப் போடப்பட்டது. தற்போது இத்திட்டத்தின் அவசியத்தை கருத்தில் கொண்டு நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டத்தை எளிமையான முறையில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. சென்னை, எல்லீஸ் ரோடு, செல்வம் மஹாலில் இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு நமது சங்க தலைவர் திரு. புருஷோத்தமன் அவர்கள் தலைமை தாங்கினார். செயலாளர் திரு .துரைபாபு அவர்கள், பொருளாளர் திருமதி.கௌரி பார்த்தசாரதி அவர்கள், பி.ஆர் .ஓ. திரு. பாலச்சந்தர் அவர்கள், ஏனைய சங்க நிர்வாகிகள், செயற்குழு உறுப்பினர்கள் முன்னிலையில், நமது சங்கத்தின் முன்னாள் தலைவர் திரு.சுந்தரவடிவேலு அவர்கள், நமது சங்கத்தின் மூத்த உறுப்பினர்கள் திரு.ச தாசிவம் அவர்கள் மற்றும் லயன். திரு.விஜயகுமார் ஆகியோர் இத்திட்டத்தை தொடங்கி வைத்தார்கள்.

இத்திட்டத்தில் இணைவதற்கான விண்ணப்ப படிவங்கள் பகுதி செயலாளர்கள் மூலமாக வழங்கப்பட்டு வருகிறது.பகுதி வாரியாக சங்க நிர்வாகிகளும் நேரில் சென்று விண்ணப்பங்களை பெற்று வருகின்றனர். இத்திட்டத்தில் இணைபவர்கள் அவர்களுடைய மற்றும் வாரிசுதாரருடைய ஆதார் அட்டை நகல்- 2, பாஸ்போர்ட் சைஸ் போட்டோ-2, ஆகியவை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும். ஆயிரம் ரூபாய் ரொக்கமாகவோ அல்லது ஜி-பே மூலமாகவும் செலுத்தலாம்.

வடசென்னை பகுதி சங்க உறுப்பினர்களுக்காக எண்ணூர் பகுதியிலும், மத்திய சென்னை சங்க உறுப்பினர்களுக்காக பட்டாளம் பகுதியிலும், தென் சென்னை எஸ்1 பகுதி சங்க உறுப்பினர்களுக்காக மேற்கு மாம்பலம் பகுதியிலும், எஸ் -2, பகுதி சங்க உறுப்பினர்களுக்காக திருவல்லிக்கேணி மற்றும் வேளச்சேரி பகுதியிலும் நமக்கு நாமே திட்டத்தின் சிறப்பு முகாம் நடைபெற்றது. இதுவரை 500 பேர் வரை பதிவு செய்திருக்கின்றனர்.

டிசம்பர் 31ஆம் தேதி 2024 வரை மட்டுமே வயது வரம்பின்றி சீனியர் சிட்டிசன் போட்டோகிராபர்களும், வீடியோகிராபர்களும் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். ஜனவரி 1ஆம் தேதி 2025 க்கு பிறகு அறுபது வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இத் திட்டத்தில் சேர்க்கப்படுவார்கள். எனவே 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் நமக்கு நாமே திட்டத்தில் உடனடியாக தங்கள் பெயரை பதிவு செய்து விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். ஜனவரி 15ஆம் தேதி முதல் நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட் டத்தின் செயல்முறைகள் நடைமுறைப்படுத்தப்படும் என்று அறிவிக்கப்படுகிறது. நமக்கு நாமே திட்டத்தின் செய்தியை உடனுக்குடன் தெரிந்து கொள்ள வெப்சைட் வெகு விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

# நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்ட சிறப்பு முகாம் நடைபெற்ற இடங்கள்

## வடசென்னை பகுதி



## தென் சென்னை S-2 பகுதி



## தென் சென்னை S-1 பகுதி





தென் சென்னை எஸ் –1 பகுதியை சேர்ந்த நமது சங்க உறுப்பினர் எஸ். அப்பாதுரை அவர்கள் கடந்த மாதம் உடல் நல குறைவின் காரணமாக இயற்கை எய்தார். அன்னாருடைய ஆன்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறோம். அன்னாருக்கு அஞ்சலி செலுத்திய நமது சங்க நிர்வாகிகள் நமது பொதுக்குழு தீர்மானம் படி ஈமச்சடங்கு செய்வதற்கான தொகை 20,000 ரூபாயை அவருடைய வாரிசுதாரர்களிடம் வழங்கினார்கள்.

- CVPA

## புரசைவாக்கம், சூளை - பட்டாளம் பகுதி



நமது சங்க உறுப்பினர் மணிமாறன் கோகிலா தம்பதியரின் மகள் ரித்திகா– நித்திஷ் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு, பி.ஆர்.ஓ பாலச்சந்தர், துணைத் தலைவர் கௌஸ் பாட்ஷா, இணைச்செயலாளர் பிரபாகரன் மற்றும் பகுதி செயலாளர்கள் ஆகியோர் மணமக்களை நேரில் சென்று வாழ்த்தினார்கள்.





நமது சங்க உறுப்பினர் உதயகுமார் கலைவாணி இவர்களின் செல்ல குழந்தைகள் கோகுல் ரமணா, சுபன் ஆகியோருக்கு நடைபெற்ற காதணி விழா நிகழ்ச்சியில் நமது சங்க தலைவர் புருஷோத்தமன், செயலாளர் துரைபாபு, பி.ஆர்.ஓ பாலச்சந்தர், துணைத் தலைவர்கள் சீனிவாசன் மற்றும் வேலு இணைச்செயலாளர் வீரபாண்டி பாபு ஆகியோருடன் பகுதி செயலாளர்களும் கலந்து கொண்டார்கள்.

Regd No. : 446/96

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

எண்.48, பூரா சாஹிப் தெரு, மவுண்ட் ரோடு, சென்னை-600002. Cell : 7824034734

E-mail : cvpa9602@gmail.com Website : www.cvpa.in

# நமக்கு நாமே
# குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

## சென்னை வீடியோ போட்டோ கலைஞர்களின் குடும்ப நலன் கருதி

## CVPA உருவாக்கியுள்ள நமக்கு நாமே திட்டத்தில்

## இன்றே இணைந்து உங்கள் குடும்ப பாதுகாப்பிற்கு

# 2 லட்சம் ரூபாய்

### அறிவிப்பு

CVPA உறுப்பினர்களின் வேண்டுகோளுக்கிணங்க நமக்கு நாமே திட்டதில் இணைவதற்கான தேதி நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நவம்பர் மாதம் 15ஆம் தேதிக்குள் இணைபவர்களுக்கு மட்டுமே வருகின்ற தைப்பொங்கலிலிருந்து திட்டம் பயன்பாட்டுக்கு வரும் என்று அறிவித்திருந்த நிலையில், இது தற்போது மேலும்15 நாட்களுக்கு (நவம்பர் 30 வரை) நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி, நமக்கு நாமே குடும்ப நலப் பாதுகாப்பு திட்டத்தில் உடனடியாக இணையுமாறு அனைவரையும் அன்போடு கேட்டுக்கொள்கிறோம்..

இப்படிக்கு
துரைபாபு
CVPA செயலாளர்

மேலும் விவரங்களுக்கு

| தலைவர் | செயலாளர் |
|---|---|
| V. புருஷோத்தமன் | P. துரைபாபு |
| 7010936732 | 92821 64723 |

# சென்னை வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள் சங்கம்

## நமக்கு நாமே குடும்ப நல பாதுகாப்பு திட்டம்

★ நமக்கு நாமே திட்டத்தில் ஒருவர் பங்களிப்பாளராக சேர வேண்டும் என்றால், அவர் கண்டிப்பாக **CVPA** -ல் உறுப்பினராக இருக்க வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் பங்களிப்பாளராக சேர்ந்த நாள் முதல் அறக்கட்டளையின் பயன்களை பெற , சங்க உறுப்பினர் **CVPA**-ல் தொடர்ந்து ரினிவல் செய்வது என்பது கட்டாயம் ஆக்கப்படுகிறது. (வயது வரம்பு கிடையாது)

★ நமக்கு நாமே திட்டத்தில் பங்களிப்பாளராக இணைய வேண்டும் என்றால் CVPA-ன் நடப்பு நிர்வாகக் குழுவின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகியோரின் கையொப்பமிட்ட பரிந்துரை கடிதத்தின் மூலமே, அவர்கள் அறக்கட்டளையில் பங்களிப்பாளராக இணைய முடியும்.

★ நமக்கு நாமே திட்டம் குறைந்தபட்சம் ஆயிரம் உறுப்பினர்களை இணைத்து, அதை ஒரு இலக்காக கொண்டு செயல்படுத்துவதே இத் திட்டத்தின் முதல் நோக்கமாகும்.

★ நமக்கு நாமே திட்டம் செயல்பாட்டிற்கு வரும் பட்சத்தில், நமது கலைஞர்களுக்கு ஏற்படும் விபத்து மற்றும் இயற்கை மரணங்களுக்கு, அவர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்கு எவ்வித காப்பீடும் எடுக்காமல் நமக்கு நாமே திட்டத்தின் மூலம் சுமார் **2 லட்சம்** ரூபாய் வரை (உச்சவரம்பு) பயனானர்களுக்கு வழங்கப்படும். (உறுப்பினர் சேர்க்கைக்கு ஏற்ப இந்த தொகை மாறுபடும்).

★ இத்திட்டத்தில் உங்களை பங்களிப்பாளராக இணைத்துக் கொள்ள ஒரே தவணையாக ஆயிரம் ரூபாய் முதலில் செலுத்த வேண்டும். இந்த தொகை நலத்திட்ட உதவி தொகையாக வங்கிக் கணக்கில் உடனடியாக வரவு வைக்கப்படும்.

★ அறக்கட்டளைக்கு பங்களிப்பாளர் செலுத்தும் தொகையான ஆயிரம்**(1000/-)** ரூபாயில் **200** ரூபாய் நுழைவு கட்டணமாகவும், மீதமுள்ள 800 ரூபாய் பயனாளிகளின் குடும்பங்களுக்கு பயனாளி தொகையாக வரவு வைக்கப்படும். எக்காரணம் கொண்டும் உங்கள் அறக்கட்டளையில் உங்கள் வங்கி கணக்கு ஜீரோ பேலன்ஸ் ஆகாமல் பார்த்து கொள்ள வேண்டும்.

★ நமக்கு நாமே திட்டத்தில் நீங்கள் பங்களிப்பாளராக சேர வேண்டும் என்றால் அறக்கட்டளையின் முன்மொழிவு படிவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, நுழைவுத் தொகை, பங்களிப்புத் தொகையை முழுமையாக செலுத்திய பிறகு எழுத்து பூர்வமாக ஏர்ப்புத் தகவல் தெரிவிக்கப்பட்ட தேதியில் இருந்து 120 நாட்களுக்குப் பிறகு நமக்கு நாமே திட்டத்தின் பயனாளியாக அவர் தகுதி பெற்றவர் ஆவார்.

★ நமக்கு நாமே குடும்ப பாதுகாப்பு திட்டத்தின்படி ஒரு பயனாளிக்கு அறக்கட்டளை மூலம் ரூபாய் 200 பணம் வழங்கிய பிறகு,15 நாட்களுக்குள், பங்களிப்பாளர் அறக்கட்டளை வாயிலாக நமக்கு நாமே திட்டத்திற்கு செலுத்த வேண்டிய 200★ ரூபாயை தாமதம் இன்றி செலுத்தி விட வேண்டும்.

★ ஒவ்வொரு பயனாளிகளுக்கும் பணம் வழங்கியவுடன் இது தொடர்பான அனைத்து விபரங்களும், நமக்கு நாமே திட்டத்தின் அறக்கட்டளையின் இணையதளத்தில் உடனுக்குடன் தெரிவிக்கப்படும்.

★ நமக்கு நாமே திட்டத்தின் படி பங்களிப்பாளரின் பணம் பயனாளிகளுக்கு வழங்கி விட்ட பிறகும் கூட அவர் பணம் செலுத்தாமல் ஜீரோ பேலன்ஸ் ஆகும் பட்சத்தில் அவர் பங்களிப்பாளர் மற்றும் பயனாளியின் தகுதியை இழக்கின்றார். மீண்டும் அவர் பங்களிப்பாளராக தொடர வேண்டும் என்றால், அறக்கட்டளை பயனாளிகளுக்கு வழங்கிய பங்களிப்பாளரின் தொகையினை முழுவதுமாக செலுத்திய 120 நாட்களுக்குப் பிறகுதான் அவர் பயனாளிகளுக்கான தகுதியை பெறுகிறார். (அவர் மீண்டும் புதிய பங்களிப்பாளராக இணைய முடியாது)

★ **CVPA** வின் கௌரவ உறுப்பினர்கள் 60 வயது வரை உள்ளவர் கூட இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையலாம்

★ ஒரு பங்களிப்பாளர் அறக்கட்டளையில் இணைந்து 120 நாட்களுக்கு பிறகு தான் அவரது இறப்பின் அடிப்படையில் அவரது வாரிசு பயனாளியாக முடியும்.

★ பங்களிப்பாளர் மற்றும் பயனாளி இருவரும் இல்லாத பட்சத்தில் அரசு சட்டப்படி வாரிசுதாரராக உரிமை பெறுபவர் பயனாளி தொகையை பெறுவதற்கான தகுதி உடையவர் ஆவார்.

★ து குறித்து மேலும் விபரம் அறிய நமது சங்க செயலாளர் துரைபாபு அவர்களின் அலைபேசி எண்ணுக்கு (9282164723) தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.


TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION
PRESENTS
ORGANISERS
FOTOTECH Private Limited
EditPoint India
A MEGA PHOTO & VIDEO IMAGING EXHIBITION
TVPA's Digi Media 2024
(march towards technology)
FREE ENTRY
5th YEARS EDITION
AT CHENNAI TRADE CENTRE, NANDAMBAKKAM, CHENNAI.
December 20 21 22 2024
The Great Grand Show. For the Professionals.... By the Professionals.
. CAMERAS . STUDIO ACCESSORIES . EDITING SOFTWARE
. WORKSHOP . PHOTO CONTEST . FASHION SHOW
Supported By
PPAI
Media Partner
TAMILNADU VIDEO & PHOTOGRAPHERS ASSOCIATION
REGD.OFF:42, SINGARATHOPE, TRICHY - 620008.
ADMIN OFF : 8C, ANNAI COMPLEX, THIRUVALLUVAR SALAI, DINDIGUL - 624001, TAMILNADU.
For Further Details Con: 94432 01656 / 98421 98850 / 94435 10295
Scan QR to Register to get E-PASs and Become a PARIVAR MEMBER today
POWERED BY
FOTOTECH PARIVAR INDIA PVT.LTD

Kishkinta Panchavati
Venue for Shoots & Events

*Discover*
# PANCHAVATI AT KISHKINTA

## *Chennai's Premium Destination for Memorable Shoots & Events*







### Perfect for:

- Pre & Post-Wedding Photoshoots
- Scenic Events & Gatherings
- Themed Venues & Selfie Spots
- Stunning Landscapes & Backdrops

Make your moments unforgettable with captivating themes and breathtaking venues at Panchavati, Kishkinta.

**For Reservations**
**72001 43318 | 89399 11966**

Varadarajapuram, Darkhas Ward 2, Chennai - 600 132

panchavatikishkinta@gmail.com
www.panchavatikishkinta.com

/panchavatikishkinta

**CVPA NEWS** (Tamil & English ) Monthly Newspaper, **RNI No. TNBIL / 2005 / 15261 (R.Dis no.1834/04)**
Published by **B.SRIDAR,** on behalf of
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 2860 7821 Email : cvpanews2005@gmail.com, Website : www.cvpa.in
Printed by **M.NAVANEETHAN,** at **Nava Jothi Achagam,** No.8. Mukhtharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : **B.SRIDAR,** Mobile: 8015170351